# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2000, யூன் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


2000, யூன் மாதம் 23 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 10.25** **தபாற் செலவு: ரூபா 3.50**

## 2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

## இலங்கை வரிவிதிப்பு நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"இலங்கை வரிவிதிப்பு நிறுவகம்" என்று அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒரு நிறுவகம் அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக்கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக இதன் முன்னர் தாபிக்கப்பட்டிருப்பதாலும் : முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட நிறுவகம் எக்குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுகால வரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் ; அத்துடன் அவ்விண்ணப்பத்தை அனுமதிப்பது பொதுமக்கள் நன்மைக்கானதாக விருக்குமாதலாலும் :

ஆகவே, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

**1.** இச்சட்டம் 2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் இலங்கை வரிவிதிப்பு நிறுவகத்தில் (இது இதனகத்துப் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தற்போதைக்கு உறுப்பினர்களாக உள்ளவர்களும் அத்தகைய எண்ணிக்கையினரான அத்தகைய ஆட்களும் அல்லது இதன்பின்னர் இலங்கை வரிவிதிப்பு நிறுவகத்துக்கு உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவோரும் (இது இதன் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை வரிவிதிப்பு நிறுவகம்" எனும் பெயர் மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் எல்லா நீதிமன்றங்களுள்ளும் அப்பெயர் இலங்கை வரிவிதிப்பு நிறுவகத்தைக் கூட்டிணைத்தல்.

2-௭ 047229 - 650 (97/10)

கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம், அத்துடன் அது பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியவாறு அவ்விலச்சினையை மாற்றவும் தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) பொதுமக்கள் உறுப்பினர்களிடையே வரிவிதிப்பு துறையில் விழிப்புணர்வை உருவாக்குதல், அத்துடன் வரிவிதிப்பு மற்றும் பகிரங்க நிதி தொடர்பில் பொருளாதார அரசியல், விஞ்ஞான கோட்பாடுகள் மற்றும் விரிவிதிப்பு நடைமுறை, வரிவிதிப்பு சட்டம் பற்றிய கல்வி என்பவற்றை மேம்படுத்தலும் முன் மேம்படுத்துதலும்;

(ஆ) பரீட்சைகளை நடாத்துதலும், வரிவிதிப்பு விடயத்தில் தமது அறிவு, ஆற்றல் ஆகிய விடயங்களில் நிறுவகத்தின் பேரவையினைத் திருப்திப்படுத்திய ஆட்களுக்குச் சான்றிதழ்களை வழங்குதலும் ;

(இ) கூட்டுத்தாபன உறுப்பினர்களின் தொழில்சார் நடத்தையை ஒழுங்குபடுத்தும் நோக்கங்களுக்காக அதன் உறுப்பினர்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடத்தைக் கோவையை வடிவமைத்தல்;

(ஈ) இலங்கையில் உரிய இறைவரி அதிகாரசபைகளுக்கு வரிபற்றிய விழிப்புணர்வையும் அறிவையும் பரவச் செய்தலை முன்னேற்றுதலும் ஒருங்கிணைத்தலும் ;

(உ) வரிவிதிப்பு விடயத்தில் தகவல்களையும் கருத்துக்களையும் பரிமாறுதலை வசதிப்படுத்துதலும் அத்துடன் இவ்விடயம் மீதான சிறந்த தகவல்பெற்ற பொது அபிப்பிராயத்தினை உருவாக்குதலும் ;

(ஊ) இலங்கையிலும் மற்றைய நாடுகளிலும் வரிவிதிப்புத் தொடர்பிலான பயனுள்ள தகவலைப் பெறுதலுக்கும் பரப்புதலுக்குமான சந்தர்ப்பங்களை வழங்குதல் ;

(எ) வரிச்சட்டம் அத்துடன் அதன் நடைமுறை என்பவற்றின் மேம்பாட்டிற்காக அல்லது இலகுவாக்கலுக்காக அரசாங்கத்திற்கு விதந்துரைகளை மேற்கொள்ளுதலும் அத்துடன் வரிவிதிப்பு தொடர்பிலான சட்டத்திலுள்ள ஒழுங்கீனங்களைக் கவனத்தில் எடுத்தலும் அத்துடன் வரிச்சட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் மீதான கருத்துரைகளை வழங்குதலும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

4. கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங்களையுடையதாதல் வேண்டும் :—

(அ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மைக்கான தகைமைப் பரீட்சைகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் அத்துடன் நடாத்துதலும் ; அத்துடன் அத்தகைய பரீட்சைகளுக்கான கற்கை நெறிகளை அங்கீகரித்தல் ;

(ஆ) மாணவர்களைப் பதிவு செய்தலும் அத்துடன் அத்தகைய பதிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பயிற்சி நெறிகளைக் கண்காணித்து ஒழுங்குமுறையாக்குதலும் அத்துடன் அத்தகைய பயிற்சி நெறிகளுக்கான காலத்தைத் தீர்மானித்தலும் ;

(இ) வெவ்வேறு வகையான உறுப்பாண்மைகளின் பதிவு தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தைத் தீர்மானித்தல்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் பதிவேடு ஒன்றினைப்பேணி வெளியிடுதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே உயர் தொழில் தராதரம் பேணப்படுவதை உறுதிப்படுத்துதலும், அத்தகைய தராதரங்களைப் பேணுவதற்கு அவசியமான முறைகள் நடைமுறைகளுடன் அவர்களைப் பழக்கப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல் ;

(ஊ) வரிவிதிப்புத் தொடர்பிலான நூல்கள் அத்துடன் பருவ வெளியீடுகளின் நூலகமொன்றினைப் பேணிவருதலும், இலங்கையில் அத்தகைய நூல்கள், பருவ வெளியீடுகளைப் பிரசுரித்தலை ஊக்குவித்தலும் ;

2-

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களின் மேம்பாட்டிற்கு விரும்பத்தக்கதெனக் கருதப்படும் ஏதேனும் செய்திப் பத்திரிகைகள், பருவவெளியீடுகள், சஞ்சிகைகள், நூல்கள், பரீட்சைத்தாள்கள் சுற்றறிக்கைகள் அல்லது சிற்றிதழ்களை அச்சிட்டு வெளியிடுதல் ;

(ஏ) இலங்கையின் வரிவிதிப்புத்துறையிலும் மற்றும் வேறு அது தொடர்பிலான விடயங்களிலும், ஆராய்ச்சிகளைக் கொண்டுநடாத்துதலும் ஊக்குவித்தலும் ; அத்துடன் பொதுவில் கூட்டுத்தாபனத்துடன் பதிவு செய்துகொண்டுள்ள மாணவர்களின் வரிபற்றிய கல்வியை முன்னேற்றுதல் ; அத்துடன் வரி தொழிலுனர்கள் மற்றும் கல்விமான்களின் முன்னேற்றத்தினை உறுதிப்படுத்துதல் ;

(ஐ) பதிவுசெய்யப்பட்ட மாணவர்களினால் பின்பற்றப்பட வேண்டிய ஏதேனும் செய்முறைப் பயிற்சித் திட்டங்களை அங்கீகரித்தல் ;

(ஒ) பேரவை திருப்திப்படும்வகையில் இயைபான பரீட்சைகளை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த பதிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குச் சான்றிதழ்கள், டிப்ளோமா, மற்றும் பிறஅளிப்புக்களை வழங்குதல் ;

(ஓ) வங்கிக் கணக்குகளைத் திறத்தல், செயற்படுத்தல் அத்துடன் மூடுதல் ;

(ஔ) பிணைப் பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணம் கடன் பெறுதல் அல்லது பணம் சேகரிக்கலாம் ;

(க) மானியக் கொடைகளையும், கொடைகளையும் பெறுதலும் சேகரித்தலும் ;

(ங) அதனது நிதிகளை முதலீடு செய்தல் ;

(ச) அதனது அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலைக்கமர்த்துதல், வேலையிலீடுபடுத்தல், விலக்குதல், அல்லது ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகளை பிரயோகித்தலும் ;

(ட) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைச் செயற்படுத்துவதற்கு அவசியமாகக் கருதப்படும் வேறு ஏதேனும் மற்றைய நடவடிக்கைகளைக் கொண்டு நடாத்துதல் ;

(ஞ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையொன்றை வடிவமைத்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபன அலுவல்களின் முகாமைக் கட்டுப்பாடு, நிர்வாகம் என்பன தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் வேறு ஏழு உறுப்பினர்களைக் கொண்டதான நிறைவேற்று பேரவை ஒன்றுக்கு (இது இதனகத்துப் பின்னர் "பேரவை" என்று குறிப்பீடுசெய்யப்படும்) கையளிக்கப்படுதல் வேண்டும்.

அவ்வேழு உறுப்பினர்களில் :–

(அ) மூன்று உறுப்பினர்கள் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) நான்கு உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும் ;

ஆயின், (அ) என்னும் பந்தியினால் தேவைப்படுத்தப்பட்டவாறான உறுப்பினர்களின் எண்ணிக்கையில், இறப்பினால், விலகலினால் அல்லது வேறு வகையினால் வெற்றிட மேற்படுமிடத்தும் அத்துடன் அத்தகைய வெற்றிடமேற்பட்டு மூன்று மாதங்களுக்குள் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு நியமனமொன்றைச் செய்வதற்கு நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் தவறியுமிருப்பின் பேரவையானது அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவரை தெரிவுசெய்தல் வேண்டும் :

ஆயின் மேலும் (ஆ) என்னும் பந்தியினால் தேவைப்பட்டவாறான உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒரு வெற்றிட மேற்படுமிடத்து பேரவையானது, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது பேரவையானது, இச்சட்டம் தொடங்குவதற்கு தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் பேரவையாகவிருத்தல் வேண்டும்.

(3) முதலாவது பேரவையானது இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஐந்து வருட காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும். ஐந்து வருட கால முடிவில் பேரவையானது விதிகளுக்கு இணங்கத் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழான தெரிவானது இந்தச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அத்தகைய விதிகளுக்கு இணங்க நடத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் உறுப்பாண்மைக் கான தகவுத்திறன்

**6.** பின்வரும் ஆட்கள் நிறுவனத்தின் உறுப்பாண்மைக்கான தகவுத் திறனுடையவராதல் வேண்டும் :–

(அ) இச்சட்டத்தின்கீழ் பேரவையினால் நடாத்தப்படும் கூட்டுத்தாபன தகைமைகாண் பரீட்சைகளில் சித்தி பெறும் ஆளொருவர் ; அல்லது

(ஆ) பேரவைக்கு ஏற்கத்தக்கதான ஆராய்ச்சிக் கட்டுரை யொன்றினை அல்லது வேறு வெளியீடுகள் சமர்ப்பிக் கும் ஆளொருவர்.

நிதிசார் ஏற்பாடுகள்.

**7.** (1) பேரவையினால் பெறப்படும் சகல பணங்களும் அதன் முகாமைத்துவத்தின்கீழும் கட்டுப்பாட்டின்கீழும் தாபித்துப் பேணப்பட வேண்டிய நிதியமொன்றுக்குச் செலுத்தப்பட வேண்டும். இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்கள், பணிகள், கடமைகள் என்பவற்றைக் கொண்டுநடாத்துவதில் பேரவையினால் உறப்படும் சகல செலவினங்கள், கடப்பாடுகள் என்பவற்றை அதிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) பேரவையானது இந்நிதியிலுள்ள பணத்தினை, இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அல்லது உத்தரவாதப்படுத் தப்பட்ட ஏதேனும் பிணைப்பொறுப்புகளின் அல்லது ஏதேனும் வேறு பிணைப்பொறுப்புகளின் அல்லது வைப்புகளின் அல்லது பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட அத்தகைய முதலீடுகளில் முதலீடு செய்யலாம்.

(3) பேரவையானது, அது உகந்ததெனக் கருதும் அத்தகைய முறையில் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கென பணத்தைக் கடனாகப் பெறலாம் அல்லது சேகரிக்கலாம்.

(4) பேரவையானது, அதன் நோக்கங்களின் மேம்பாட்டுக்கு உகந்ததெனக் கருதக் கூடியவாறாக கூட்டுத்தாபனத்தின் எல்லா ஆதனத்தினை அல்லது அதன் ஏதேனும் பகுதியை விற்கலாம், குத்தகைக்கு விடலாம், வாடகைக்கு விடலாம், வாடகைக்கொள் வனவிற்கு விடலாம், கொடுத்து மாற்றலாம், ஈடுவைக்கலாம் கையுதிர்க்கலாம் அல்லது வேறுவிதமாகக் கையாளலாம்.

(5) பேரவையானது ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தினைக் கொள்வனவாக, நன்கொடையாக அல்லது வேறு ஏதேனும் வகையாகக்கொள்ளலாம்.

(6) பேரவையானது இலங்கையிலுள்ள ஏதேனும் வங்கியில் அல்லது வங்கிகளின் கணக்கொன்றினைப் பேணிவரலாம்.

(7) பேரவையானது பின்வருவன தொடர்பிலான உகந்த கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(அ) கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்டதும் செலவழிக்கப்பட்டதுமான எல்லாப் பணத் தொகைகளும், அத்துடன் அத்தகைய பெறுகைகள், செலவுகள் மேற்கொள்ளப்பட்டவை தொடர்பிலான பற்றுச் சீட்டுக்களும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தால் செய்யப்பட்ட பண்டங்களின் எல்லா விற்பனைகளும், கொள்வனவுகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும்.

(8) கணக்குப் புத்தகங்கள் கூட்டுத்தாபனத்தின் அலுவலகத்தில் அல்லது பேரவை உகந்ததெனக் கருதும் அத்தகைய வேறு இடத்தில் வைத்திருக்கப்பட வேண்டுமென்பதுடன், அவை எப்போதும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் பரிசீலனைக்கு வெளிக்காட்டி வைக்கப்படுதலும் வேண்டும்.

(9) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டவரும் இந்நோக்கத்திற்கென நியமிக்கப்பட்டவருமான தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் அல்லது கணக்காய்வாளர்களினால் கூட்டுத்தாபனத்தின் வருடாந்தக் கணக்குகள் கணக்காய்விற்குட்படுத்தப்படுதல் வேண்டும்.

(10) ஏதேனும் ஆண்டில் ஏப்பிறல் முதலாம் தேதியன்று தொடங்கி அனைத்துவரும் ஆண்டின் மாச்சு முப்பத்தோராம் தேதியன்று முடிவடையும் பன்னிரெண்டு மாத காலப்பகுதி, கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டாக அமைதல் வேண்டும்.

(11) நிதியாண்டின் முடிவினையடுத்து கூடியவிரைவில் உரிய முறையில் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் விபரக்கூற்று கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், கணக்குகளின் பிரதிகள் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கும் கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுப்பிவைக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் மற்றும் அதனது நோக்கங்களை நிறைவேறச் செய்வதற்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராதனவும், பொதுக்கூட்டமெதனிலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டிற்கு குறையாத பெரும்பான்மை கொண்டும் காலத்திற்குக்காலம் விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்கு சட்டமுறையானதாதல் வேண்டும். முன்சொல்லப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி பின்வரும் எல்லாக் கருமங்கள் அல்லது அவற்றுள் ஏதேனும் கருமம் தொடர்பில் அத்தகைய விதிகள் ஆக்கப்படலாம் :—

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தலும், ஒவ்வொரு வகை உறுப்பினராலும் செலுத்தப்படவேண்டியதான கட்டணம், அவர்களுடைய உட்சேர்வு, விலகல் மற்றும் விலக்கல் ;

(ஆ) கூட்டுத்தாபனம் அல்லது பேரவை அல்லது அதன்மீது உபகுழுவின் கூட்டங்களைக் கூட்டுவதில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறை, அதற்கான கூட்ட நடப்பெண் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதல் ;

(இ) பேரவையைத் தெரிவுசெய்தல், பேரவையின் பதவிதாங்குநர்களின் பதவி விலகல் அல்லது பதவி வறிதாதல் அல்லது பதவியலிருந்து அகற்றுதல் அத்துடன் பேரவை உறுப்பினர்களின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ; அத்துடன் நடத்தை

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின், முகவர்களின், சேவையாளர்களின், நியமனமும் தத்துவங்களும் கடமைகளும், நடத்தையும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தின் நிருவாகமும் முகாமையும் ;

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமைக்காகவும் அதன் குறிக்கோள்களை நிறை வேற்றுவதற்காகவும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய தேதியில் வலுவிலிருக்கும் நிறுவகத்தின் விதிகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத மட்டில் கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் இப்பிரிவின் ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒரு விதியைப் போன்ற அதேமுறையில் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

பெயர்களின் பின்னால் பட்டங்களைப் பயன்படுத்துதல்.

**9.** கூட்டுத்தாபனத்தின் இணைப்பினரொருவர் தமது பெயரின் பின்னால் எப்.ரி.ஐ.ஐ. (இலங்கை) எனும் எழுத்துக் களையும் பயன்படுத்தும் உரித்துடையவராதல் வேண்டும். அத்துடன் கூட்டுத்தாபனத்தின் கூட்டுறுப்பினரொருவர் அதேமுறையில் ஏ.ரி.ஐ.ஐ. (இலங்கை) எனும் எழுத்துக்களைப் பயன்படுத்தும் உரித்துடையவராதல் வேண்டும். கௌரவ இணை உறுப்பினரும், கௌரவ கூட்டுறுப்பினரும் முறையே கௌரவ எப்.ரி.ஐ.ஐ. (இலங்கை), கௌரவ ஏ.ரி.ஐ.ஐ. (இலங்கை) எனும் பட்டங்களை அதேமுறையில் பயன்படுத்தும் உரித்துடையவராதல் வேண்டும்.

பட்டங்களைப் பயன்படுத்துவதற்கான மட்டுப்பாடுகள்

**10.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரரக இல்லாத ஆள் எவரும் இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தமது பெயரின் பின்னர் எப். ரி. ஐ. ஐ. (இலங்கை) அல்லது கௌரவ ஏ. ரி. ஐ. ஐ. (இலங்கை) எனும் பட்டங்களை அல்லது எழுத்துக்களை எடுத்தலோ பங்கப்படுத்துதலோ இயலாது.

நிறுவகத்தினால் செலுத்தப்படவுள்ள கடன்களும் நிறுவகத்துக்குச் செலுத்தப்படவுள்ள கடன்களும்.

**11.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்துக்குள்ள எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டு பொறுப்பு நீக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அந்நாளன்று நிறுவகத்துக்குச் செல்மதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படவுள்ள ஒப்பப் பணங்கள் உதவுதொகைகள் என்பன யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை கூட்டுத்தாபனம் வைத்திருக்கலாம்.

**12.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு மூலம், கொடை மானியக்கொடை மூலம், மரணசாதனக் கையளிப்பு மூலம் அல்லது வேறுவகையில் அதற்குரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபன உறுப்பினர்களின் பொறுப்புக்களின் வரையறை.

**13.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கடன்களையும் பொறுப்புக்களையும் தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறு ஏதும் நோக்கத்திற்காக, கூட்டுத்தாபனத்திற்கு அவரிடமிருந்து செல்மதியாகக் கூடியதான அத்தகைய உறுப்பாண்மைக் கட்டணத் தொகையை விஞ்சியதான ஏதேனும் உதவு தொகையைச் செலுத்துவதற்கு பொறுப்பாதலாகாது.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**14.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, செயலாளரின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும். அது பேரவையின் அதிகாரத்துடனும் ஆகக்குறைந்தது பேரவையின் இரு உறுப்பினர்கள் முன்னிலையில் தவிர ஏதேனும் சாதனத்தில் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அத்துடன் அத்தகைய கையொப்பமிடுதல் சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாயிருத்தல் வேண்டும்.

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசினது உரிமைகளை அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளை அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்கள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துவதாதலோ பாதிப்பதாதலோ ஆகாது.

குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.

**16.** இச்சட்டத்தில் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.